(இ) ஆமெனில், எவ்வளவு நாட்கள் நடைபெற்றன ? எந்த வகையில் தீர்வு காணப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு ஜவுளி கார்ப்பரேஷன் ஏற்று நடத்துகிற கோவை பஞ்சாலைகளில் 1973 எப்ரல் மாதத்தில் வேலை நிறுத்தங்கள் ஏதும் நடைபெறவில்லை.

Labour Education Institute.

*189 *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the activities to be taken up under the auspices of the Labour Education Institute, recently opened at Nandambakkam, Madras ; and

(*b*) whether there is any proposal with the Government to open such Institutes in the headquarters of the Districts of Coimbatore, Madurai and Tiruchirappalli ?

தொழிலாளர் கல்வி நிலையம்.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில், சென்னை நந்தம்பாக்கத்தில், திறந்து வைக்கப்பட்டுள்ள தொழிலாளர் கல்வி நிலையத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் யாவை ?

(இ) இது போன்ற கல்வி நிலையங்களை கோவை, மதுரை, திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களிலும் ஏற்படுத்துகிற உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) தொழிற் சங்கத் தலைமையை உருவாக்குதல், தொழிலாளர் நல அதிகாரிகளுக்கும், பணியாளர் நிர்வாக அதிகாரிகளுக்கும் பயிற்சியளித்தல், துறை அதிகாரிகளுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு தொழிலாளர் கல்வி நிலையத்தைத் (Institute of Labour Studies) தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

தொழிற் சங்கங்களுக்கு தொழிலாளர்களிடையேயிருந்து தலைமையை உருவாக்குவது குறித்து உரிய முக்கியத்துவம் அளித்து தற்போது செயலிலுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் பல்வேறு கூறுகள் குறித்து தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தெரிவிக்கவும், தற்காலத்தில் தொழிலதிபர்—தொழிலாளர் உறவில் மாறுதல்கள் ஏற்பட்டு வருகிற போக்கைப் பற்றி அவர்கள் உணரச் செய்யவும் வேண்டி,

தொழிற் சங்கத் தலைவர்களின் நலனுக்காகவே பயிற்சித் திட்டங்களை இந்த நிலையம் வகுக்கவேண்டும். நிர்வாகிகளுக்கு அதிலும் குறிப்பாக தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் உள்ள தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலனுக்கும் பணியாளர் நிர்வாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிற நிர்வாகிகளுக்குப் பயிற்சியளிப்பது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணியிலும் இந்த நிலையம் தனது நாட்டத்தைச் செலுத்தும்.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுமில்லை.

திரு. காட்டூர் கோபால் : தலைவர் அவர்களே, கோவையிலே எற்கெனவே அமைந்திருக்கின்ற தொழிலாளர்களுடைய கல்வி மண்டலத்தில் இத்தகைய பயிற்சித் திட்டங்கள் ஏதாவது அமுலாக்குவதற்காக எற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கோவையில் அந்த மாதிரி பயிற்சித் திட்டங்கள் தற்போது அமுலாக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தொழிலாளர்கள் கல்வி நிலையங்கள் வாயிலாக தொழிலாளர்களுக்கு மாத்திரம் கற்பிப்பதைப் போன்று தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுடைய வளரும் உரிமைகளைப் பற்றி உணர்த்துவதற்கு எதேனும் சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இப்போது அரசினிடத்தில் இல்லை.

THIRU V. ISVARMURTI : Mr. CHAIRMAN, Sir, there is already a scheme operated by the Central Board of Workers Education. May I know whether the same Board is operating this also ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே, கோவையிலே இருப்பது மத்திய அரசினுடைய நிறுவனம், சென்னையிலே இருப்பது தமிழக அரசைச் சார்ந்த நிறுவனம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Appointment of a Trustee in Arulmigu Anjaneyar Swami Devasthanam, Villupuram, South Arcot District.

*190 *Q.*—THIRU K. ARIVAZHAGAN : (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—